[1973 மார்ச் 22]

*468 வினா.—திரு கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெண்ணலூர்ப்பேட்டைத் துணை வட்டம், ஆமிதாநல்லூர் அரிசன காலனி மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதில் மேலும் ஏற்படும் காலதாமதங் களுக்குக் காரணங்கள் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : செங்கை மாவட்டம், பெண்ணலூர்ப்பேட்டை துணை வட்டம், ஆமிதாநல்லூர் கிராம அரிஜனங் களுக்கு வீட்டு மனைகளுக்கான பட்டாக்கள் 19—12—72 அன்று வழங்கப் பட்டு விட்டன.

திரு கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, நன்றி.

குடியிருப்பு அனுபோகதாரர்கள் சட்டம்.

*469 வினா.—திரு சு. துரைசாமி :
திருமதி : த.ந. அனந்தநாயகி : } மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை குடியிருப்பு மனைச் சட்டத்தை தமிழ்நாடு முழுவதற்கும் நீட்டிக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : அ & இ : ஆம். தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமைஉறுதி செய்தல்) சட்டத்தை செங்கற்பட்டு, வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, சேலம் (ஏர்காடு துணை வட்டம் நீங்கலாக) இராமநாதபுரம் (இராஜபாளையம் துணை வட்டம் நீங்கலாக ஏழு மாவட்டங்களுக்கு 20—12—1972 முதல் நீட்டிக்கப் பட்டுள்ளது. நகராட்சி மன்றங்கள், நகர பஞ்சாயத்துக்கள், நகரியங்கள் மேற்படி சட்டத்தில் இருந்து விலக்களிக்கப்பட்டிருக்கின்றன. 26-2-73 அன்று நிதி நிலை அறிக்கையின்போது முதல் அமைச்சர் அறிவித்தபடி மேற்கண்ட சட்டத்தை மலைத்தோட்டங்கள், நகரியங்கள், நகராட்சி மன்றங் கள், நகர் பஞ்சாயத்துக்கள் நீங்கலாக இதர மாவட்டங்களுக்கும் நீடிப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விரைவில் உத்திரவு பிறப்பிக்க படும்.

(திரு நா. வீராசாமி—தலைமை)

திரு சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை நீட்டிக் கிற காலத்தில் பஞ்சாயத்துக்களுக்கும் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்ப தால், சின்ன கிராமங்களும் நகரப்பஞ்சாயத்தாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த இடங்களில் குடி இருக்கும் குடியிருப்புதாரர்களுக்கு அந்த சலுகை கிடைக்காமல் போய் விடுகிறது. நகரப்பஞ்சாயத்துக்கும் அந்த சலுகை தரும் வகையில் சட்டத்தைத் திருத்த வகை செய்யப்படுமா ?